
Thomas Coke


James Lynch


Thomas Squance


Benjamin Clough


William Ault


William Harvard

Methodist Missionaries to Ceylon: 29 June 1814

# Methodist Church Sri Lanka Bicentenary

Onward in Christ

**1814 - 2014**


அருட்திரு. ஜோன் உவெஸ்லி

# தொடுவானம்

# *Thoduvanam*

இலங்கை மெதடிஸ்த திருச்சபை வெளியீடு:

Publication of Tamil Magazine, Methodist Church Sri Lanka: January - June 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடுவானம்

தை-ஆனி 2014

வெளியீடு

**இலங்கை மெதடிஸ்த திருச்சபை**



ஆசிரியர்

**அருட்திரு. சி. சசிகுமார்**

sasikumarst@yahoo.com

0776370279

துணை ஆசிரியர்

**அருள்திரு. அ. சா. சுபேந்திரன்**

samsubendren@gmail.com

0174904903

சஞ்சிகை தொடர்பு முகவரி

**ஆசிரியர்**

**"தொடுவானம்"**

**மெதடிஸ்த குருமனை**

**பெரிய கல்லாறு**

**கல்லாறு.**



விலை 50.00


## இம்முறை

## தொடுவானம் தொட்டுள்ளவை

*தலைப்புக்கள்* *பக்கம்*


1. ஆசிரியர் மடல் 02
2. அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ் 03
3. இலங்கை மண்ணில் மணம் வீசும் 05
4. ஓய்வுபெற்ற பணியாளர்கள் சேவை 06
   (சகோ. ஜேன் ரெட்ணம்)
5. அப்பா அப்பா இயேசப்பா 07
6. மாற்றியது மாறாத வடு 08
7. மெதடிஸ்த குணாதிசயாங்கள் 10
8. ஓய்வுபெற்ற பணியாளர்கள் சேவை 11
   (சகோ. எஸ்தர் சின்னத்தம்பி)
9. மெதடிஸ்தர் என்பவர் யார் 13
10. இறைபணியில் அர்ப்பணித்தது 14
11. தொடுவானத்தை தொடக்கூடியவை 16





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் மடல்

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடுவானம் சஞ்சிகை வழியாகத் தங்களைத் தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை தனது 200வது ஆண்டு நிறைவை **"கிறிஸ்துவில் முன்செல்வோம்"** என்னும் தொனிப்பொருளில் பல இடங்களில் நன்றி செலுத்தும் வழிபாடுகளையும், பொதுவான 200வது நன்றி செலுத்தும் வழிபாட்டை "கொழும்பு வாழும் கிறிஸ்து நாதர்" ஆலயத்திலும் நடாத்தியது. இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து இலங்கை மெதடிஸ்த திருச்சபை மக்களாக 9946 பேர் கலந்து கொண்டனர். இந்த 200வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தின் மத்தியில் இச்சஞ்சிகை வெளியிடப்படுவதும் வரலாற்றுச் சிறப்புடன் எண்ணத் தோன்றியது. இதனால் இச்சஞ்சிகை 2013-14 மெதடிஸ்த மகா சங்கத்தில் திருப்பேரவைத் தலைவர் அருட்கலாநிதி அ. வி. ஜெபநேசன் அவர்களால் வெளியீடு செய்யப்படுகின்றது.

இச்சஞ்சிகை பல வரலாற்றுப் பார்வையுடனும், பல பணிகளை நினைவு கூர்ந்தும், மற்றும் பல மெதடிஸ்த ஒழுங்குகளை தொடர்ச்சியாக வெளியிடுவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மெதடிஸ்தரின் கையிலும் இருக்க வேண்டிய சஞ்சிகையாக இனி வரும் காலங்களில் அரும் சொத்தாக வெளியிட உள்ளோம். வாசகர்கள் தங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். இச்சஞ்சிகையில் பிரசுரிக்க ஆயத்தமாக உள்ளோம். காலாண்டு சஞ்சிகையாகவும் வெளியிட உள்ளோம்.

நிச்சயம் இச்சஞ்சிகை சிறுவர், வாலிபர், பெண்கள், ஆண்கள், முதியவர், ஊழியர்கள் அனைவருக்கும் சிறந்த ஒரு பொக்கிஷமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ்



பெரிய பிரித்தானியாவிலுள்ள என்ஸெடர் என்ற இடத்தில் தோமஸ் ஹேஸ் ஸ்குவான்ஸ் என்பவர் 1790 பெப்ரவரி 3ஆம் திகதி பிறந்தார். சிறு வயது முதலே தேவ பக்தியுள்ளவராக வளர்ந்த அவர், தனது படிப்பு முடிந்ததும் தனது 22ஆவது வயதிலே மெதடிஸ்த மிஷன் பணிக்கெனத் தம்மை ஒப்புக்கொடுத்தார். ஒரு வருடத்தின் பின்பு 1813இலே அருட்திரு.தோமஸ் கோக் என்பவரின் தலைமையின் கீழ் இலங்கைக்குத் தூதுப்பணி பயணத்தை மேற்கொண்டிருந்த மெதடிஸ்த அணியிலே இடம்பெற்ற ஆறு பேரில் அவரும் ஒருவராக இணைந்து கொண்டார்.

1813 டிசம்பர் 30ஆம் திகதி அன்று இலங்கை நோக்கி ஆரம்பித்த அவர்களது கப்பற் பயணம், பல ஆபத்துகளை எதிர் கொண்டு, இடைவழியிலே நோய்வாய்ப்பட்டு மரித்துப்போன **அருட்திரு. தோமஸ் கோக்** மற்றும் **அருட்திரு. வில்லியம் ஓல்ட்** என்பவரின் மனைவி சாரா **வில்லியம் ஓல்ட்** ஆகியோரை இழந்து, இறுதியிலே 1814 ஜூன் 29 அன்று காலி துறைமுகத்தை அண்டிய கடலை வந்தடைந்த மிஷனரிமார்கள் படகின் உதவியுடன் காலித்துறைமுகத்தை வந்தடைந்தனர். அடுத்த ஞாயிறன்று ஜூலை 3ஆம் திகதி **அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ்** இலங்கையிலே தனது முதலாவது பிரசங்கத்தை காலி கோட்டையில் உள்ள ஒல்லாந்தர் தேவாலயத்தில் நிகழ்த்தினார். அதுவே அவர்களது இலங்கையில் நிகழ்த்திய முதலாவது மெதடிஸ்த மிஷன் ஆராதனையாக அமைந்தது. 2 கொரிந்தியர் 10:14இல் **"நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உங்களிடம் வரைக்கும் வந்தோமே"** என்ற பகுதியை ஆதாரமாகக் கொண்டு அவர் ஆற்றிய பிரசங்கம் அனுபவபூர்வமானதாகவும், தாம் வந்தடைய வேண்டிய இடத்துக்கு தம்மை தேவன் வழிநடத்தியதை உறுதிப்படுத்தும் விதத்திலும் அமைந்திருந்தது.

காலந்தாழ்த்தாமல் ஜீலை 11ஆம் திகதி அன்று அவர்கள் அங்கே சிறியதோர் மகாநாட்டை நடாத்தினார்கள். அந்த மகா நாட்டில் அவர்கள் இலங்கையின் எந்தெந்தப் பகுதிக்குச் செல்வது என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அந்தந்தப் பிரதேசங்களைச் சென்றடைவதற்கான தரைவழி, நதிவழிப் பயணங்கள் பற்றி அவர்கள் அங்கே அறிந்து கொண்டதுடன் தமது எதிர்காலப் பணித்திட்டங்களையும் கலந்துரையாடி அவற்றை வகுத்துக் கொண்டனர். அவர்கள் அங்கு மேற்கொண்ட தீர்மானத்தின்படி **அருட்திரு. பெஞ்சமின் கிளப்** அவர்கள் காலிக்கும், **அருட்திரு. எஸ்கின்** அவர்கள் மாத்தறைக்கும், **அருட்திரு. வில்லியம் ஓல்ட்** அவர்கள் மட்டக்களப்புக்கும், **அருட்திரு. ஜேம்ஸ் லிஞ்ச்** மற்றும் **அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ்** ஆகிய இருவரும் **யாழ்ப்பாணத்துக்கும்** தமது நியமனங்களைப் பெற்றவர்களாக தமக்கிடையே பிரியாவிடை பெற்றுக் கொண்டு பிரிந்து சென்றனர். காலியிலிருந்து கொழும்பை வந்தடைந்த **அருட்திரு. ஜேம்ஸ் லிஞ்ச்** மற்றும் **அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ்** ஆகிய இருவரும் ஆகஸ்ட் 01ஆம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய தமது தரை வழிப் பயணத்தை மேற்கொண்டனர். ஒரு வார காலத்திற்கும் அதிகமான நாட்களாகத் தொடர்ச்சியாகப் பல்வேறு பயணமுறைகளைப் பயன்படுத்திப் பயணித்து, பல காடுகளையும்,கிராமங்களையும் கடந்து சென்ற அவர்கள் இறுதியிலே ஆகஸ்ட் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அரச அதிபரால் வரவேற்கப்பட்ட அவர்கள் இருவரும் யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த ஒல்லாந்தர் ஆலயத்திலே தமது நன்றி செலுத்தும் ஆராதனையை நடாத்தினார்கள். அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் அவர்கள் அந்தக் கோட்டை ஆலயத்திலேயே தான் தமது ஆராதனையை நடாத்தி வந்தார்கள். அருட்திரு.தோமஸ் ஸ்குவான்ஸ் அவர்கள் போத்துக்கேய மற்றும் தமிழ் மொழிகளைக் கற்பதிலே ஆர்வமிக்க மாணவராகக் காணப்பட்டார். தமிழ் இலக்கண நூல் ஒன்றையும் அவர் எழுதினார். அவரது பிரசங்கங்கள் கணீரென ஒலிக்கும். இதனாற்தானோ என்னவோ அவரது பிரசங்கிக்கும் குரலை அன்று பலர் 'பேராலய அழைப்பு மணியென' விபரித்தனர். பேராலய அழைப்பு மணியானது எப்படியாக ஜெபத்துக்காக அழைப்பு விடுக்குமோ அவரது பிரசங்கங்களும் அதே போல் தீர்மானத்துக்கு அழைப்பு விடுவதாய் இருந்தது. அருட்திரு. ஜேம்ஸ் லிஞ்ச் என்பவருடன் இணைந்து 1816 ஆகஸ்ட் 01ஆம் திகதியன்று யாழ்ப்பாண மத்திய கல்லூரியை ஸ்தாபித்த அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ் அடுத்த மாதத்திலே அதாவது 1816 செப்டப்பர் 18ஆம் திகதியன்று இலங்கையிலேயே டொறத்தியா டொடெரிக்கா கொன்ராடி எனும் நங்கையைத் திருமணம் செய்து கொண்டார்.

இலங்கையிலே அன்றைய கிறிஸ்தவ சாகியத்தை அமைத்த ஒல்லாந்த மற்றும் போர்த்துக்கேய பணிகளின் கனிகளான உள்ளூர்வாசிகள் கிறிஸ்தவர்களாய் இருந்தாலுங்கூட, அவர்கள் கல்வியில் குன்றியவர்களாயும், பல வழிமுறைகளிலே இதர இலங்கையர்களைப் போலவே "கிறிஸ்தவரல்லாதவர்கள் போலவும்" இருந்துள்ளதை அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ் கண்டு கொண்டார். அவர்களுக்கு அறிவூட்டுவதிலும் வேதத்தைக் கற்பிப்பதிலும் அருட்திரு. ஜேம்ஸ் லிஞ்ச் என்பவர்களுக்கு உறுதுணையாக இருந்துள்ள அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ், தான் இலங்கையிலே பெற்ற பணி அனுபவங்களுடன் 1820இலே இந்தியாவின் நாக பட்டினத்திற்கு சென்று அங்கும் தனது பணியை விஸ்தரித்தார். யாழ்ப்பாணத்திலே இருந்த காலத்தில் அவர் ஆற்றிய பணிகளுள் குறிப்பிடத்தக்க மிக முக்கிய பணி என்னவெனில், பருத்தித்துறையில் அவர் மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னோடியாகப் பணியாற்றிமையாகும்.

நாக பட்டினத்திற்கும் இலங்கைக்கும் பணியாற்றிய அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ் மிக மோசமான உடல் நிலை காரணமாக 1822இலே இங்கிலாந்துக்குத் திரும்ப நேரிட்டது. அங்கே அவருக்கு மோசமான ஈரல் வியாதி இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டு சில காலம் அதற்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. சிகிச்சையினால் ஓரளவுக்குத் தேறிய அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ் போதிய ஓய்வு எடுத்த பின்பு 1840ம் ஆண்டளவிலே **சுன்டர்லண்ட்** எனும் இடத்திலே பணியாளராக நியமிக்கப்பட்டார். அங்கிருந்து லீட்ஸ் மற்றும் சுன்டர்லண்ட் ஆகிய இடங்களிலுள்ள சபைகளுக்கு மேற்பார்வையாளராகப் பணியாற்றி வந்த அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ் 1868ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். 2008 ஜுன் 29ஆம் திகதி அன்று அருட்திரு. தோமஸ் ஸ்குவான்ஸ் ஞாபகார்த்தமாக தோமஸ் ஹோல் ஸ்குவான்ஸ் ஞாபகார்த்த கட்டடம் அப்போது யாழ்ப்பாணத்தில் மெதடிஸ்த முகாமைக்குருவாக இருந்த அருட்திரு. எஸ். கே. கதிர்காமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

*ஆக்கம்*

**திரு. டினேஸ் குணரத்தினம்**

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மண்ணில் மணம் வீசும் மலர்கள்

இலங்கை மண்ணில் இரு கரம் கூப்பி
இருநூற்றாண்டு நினைவுகளை
இன்பமாய் இதயத்தில் நிலைத்திட
இல்லறமாய் நம்மை இணைத்திட வைத்த
இறைவா உம்மைப் போற்றுகின்றோம்

அன்று இம்மண்ணில் மிஷனரிமார்கள்
விதைத்திட்ட விதைகளும்...
தியாக சிந்தையும் திடமான உறுதியும்
இதயத்தில் எழுந்த சிறப்பான எண்ணங்களும்...
எம் திருச்சபையின் வளர்ச்சிப் படிகளாயின

இன்று சுவை தரும் கனிமரமாய்
கரம் கோர்த்து நிற்கும்-எம்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை
என்றும் முளைத்திடும் விதைகளாய்
இப்பாரினில் பரவிட
இறைவா உம்மைப் போற்றுகின்றோம்

மெதடிஸ்த மலர்கள்
தோட்டத்தில் பூத்திடும் புதிய புஷ்பமாய்
என்றும் இப்பூவுலகில் மணம் பரப்பவும்
இறை ஆசியைப் பெற்றிடவும்
மனதார உம்மைப் போற்ற
மாண்புடன் எங்கள் சிந்தை தாழ்த்துகின்றோம்

மனித மாண்பு இம்மண்ணில் மலர்ந்திட
மனிதனை மனிதனாக நினைக்கின்ற
மனங்கள் மலர்ந்திடவும்
மலர்கின்ற புதிய புஷ்பங்களாக - எங்கள்
மனங்கள் புதுப்பொலிவு பெற
எம் சிரம் தாழ்த்துகின்றோம்.

*இறை அன்புடன்:*
**சகோ. வீ. கௌரீ,**
நறுவிலிக்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேவ திருப்பணியில் 42 ஆண்டுகள்
## சகோ. ஜேன் ரெட்ணம்

நான் கிறிஸ்தவ குடும்பத்தில் ஒன்பது பிள்ளைகளில் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்தேன். குழந்தைத் திருமுழுக்கு கொடுக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் வளர்க்கப்பட்டேன். என் உறவினர்களான இரு பெண் ஊழியர்கள் அக்கால கட்டத்தில் பணி பரிந்தனர். அவர்கள் என் மாமியாரும், என் சிறியதாயாருமாவார். அன்னார்களின் பணியை பார்த்து வளர்ந்த என் உள்ளம் என்னையும் பணி செய்யவெனத் தூண்டியது. எனது 17வது வயதில் தேவ அழைப்பைப் பெற்றேன். அதைக்குறித்து எலிசபெத் பேக்கர் அம்மாவிடம் தெரியப்படுத்தவே அவர்கள் என்னை முதலாவது தாதிப் பணி கற்கும்படி யாழ்ப்பாணத்தில் உள்ள மூளாய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அப்பயிற்சி முடிவுற்றதும் கல்முனையில் உள்ள கிறிஸ்த இல்லத்திற்கு அனுப்பப்பட்டேன். அங்கு திருச்சபை ஊழியத்தோடு சிறு பிள்ளைகள் மத்தியில் கூடிய நேரம் பணி புரியும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் பின் திருப்பத்தூர், கோயம்பத்தூர் ஆச்சிரமங்களைத் தரிசித்து சில அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன். அதன்பின் கிறிஸ்த இல்லத்திற்கு வந்து சிறுவர் மத்தியில் விசேட ஊழியம் செய்ய முடிந்தது.

இந்த குழுவின் பெயர் 'வாபா மல்லிகைச் சங்கம்' என்பதாகும். பின்பு திரும்பவும் வேதாகமக் கல்லூரிக்குச் சென்று ஒரு வருடப் படிப்பை முடித்தேன். அதன் பின் செங்கலடியில் உள்ள மெதடிஸ்த ஆலயத்தின் பொறுப்பை முழுமையாக ஏற்றுக் கொண்டேன். செங்கலடியில் ஒரு நல்ல பெரிய திருச்சபை, ஆலயம், உடன் ஊழியர், நல்ல குருமனை, வாகனம் அனைத்தும் இருந்தது. சில வருடங்களின் பின் இவை அனைத்தையும் விட்டு யாழ்ப்பாண தீவுப் பகுதியில் உள்ள அல்லைப்பிட்டிக்கு அனுப்பப்பட்டேன். அந்த இடத்தை எவ்வித தடையும் இன்றி ஏற்றுக் கொண்டேன். அந்த இடத்தில் ஒரு சிறிய ஆலயத்தையும் ஒரு சிறு சபையையும் உருவாக்க ஆண்டவர் உதவி செய்தார். எனது உறவினரான கமலா, கருணை என்னும் வாலிப பிள்ளைகள் யாழ்ப்பாண நகரத்திலிருந்து வந்து ஆங்கில வகுப்பும் தையல் வகுப்பும் நடாத்த உதவினர். இவ்விடத்தில் ஊழியம் சிறப்புற அருட்கலாநிதி டி. ரி. நைல்ஸ் அவர்கள் உறுதுணையாக இருந்தார். இவ்வாறு 12 வருட ஊழியத்தை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. அதன் பின்பு கொழும்பு சிற்றி மிஷன், நிலாவெளி, மூதூர், அச்செழு, புத்தூர் ஆகிய இடங்களில் பணி புரியச் சென்றேன். பிற்காலம் யுத்தகாலமாக இருந்தபடியால், பல இன்னல்கள் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டியிருந்தது. மூதூரில் பணி பரிந்த போது வீடு முற்றாக தீக்கிரையானது. இரவோடு இரவாக மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்தேன் புத்தூரில் 8 மாதங்கள் படையினரால் பிடிக்கப்பட்டு அச்சு வேலிக்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கு வயோதிபர் உட்பட 27 பேர் 08 மாத காலமாக படையினரின் பாதுகாப்பில் இருந்தோம். அதன் பின் விடுவிக்கப்பட்டு புத்தூருக்கு வந்து 18 மாத ஊழியத்தின் பின்பு ஓய்வு பெற்றேன்.

கடந்த 42 வருடகால ஊழியத்தில் ஆண்டவர் கிருபையால் அரும் பெரும் அனுபவங்களைப் பெற்று இன்று 81 வயதில் கல்லாற்றில் உறவினர், திருச்சபை மக்களின் மத்தியில் வாழ்கின்றேன். இம்மட்டும் என்னை வழிநடத்திய தேவன் இன்னமும் நடத்துவார் என்று விசுவாசிக்கின்றேன்.

**சகோ. ஜேன் ரெட்ணம்**
ஓய்வு பெற்ற ஊழியர் (டீக்கனஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் பகுதி பாடல்

## அப்பா அப்பா இயேசப்பா...

அப்பா அப்பா இயேசப்பா
அருமையான இயேசப்பா
தப்பா தப்பா நான் நடந்தா
தட்டிக் கேட்கும் இயேசப்பா

பாப்பா பாப்பா என்று சொல்லி
பாடச் சொல்லும் இயேசப்பா
பாடி ஆடிக் காட்டும் போது
பாசம் காட்டும் இயேசப்பா

ஞானம் தரும் இயேசப்பா
ஞாலம் பார்க்கும் இயேசப்பா
நாலும் அறிந்த இயேசப்பா
நானும் உமது பிள்ளையப்பா

ஆலயத்தில் என்னைத் தேடி
அங்கும் இங்கும் பார்ப்பார் அப்பா
ஆனந்தமாய் நானிருந்தால்
அணைத்திடுவார் என் அப்பா

ஆக்கம் :
**சுட்டி அக்கா**
பெரியகல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிறுவர் பகுதி சிறுகதை*

# மாற்றியது மாறாத வடு

**"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.** (நீதிமொழிகள் 22:6)"

அது ஒரு சனிக்கிழமை "ஆதீத், இன்று பிற்பகல் நான் ஒரு கூட்டத்திற்கு போக வேண்டியுள்ளது. நான் வரும்வரை நீ போய் சிசெரா வீட்டிற்குச் சென்று விளையாடு. நான்…" அம்மா முடிக்கு முன்பே "எத்தனை மணிக்கு" என்றான் ஆதித். "நான்கு மணிக்கு" என்றாள் அம்மா. ஆதீத்துக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நேரத்தைப் பார்த்தபடியே உக்கார்ந்திருந்தான். ஆதீத்தின் ஏழ்மையும், சிசெராவின் நட்பும் தான் அவனது ஆர்வத்திற்கு காரணம். சிசெராவிடம் சென்றால் "கொம்பியுட்டர் கேம்" விளையாடலாம். இதுதான் அவனது ஏக சிந்தனை.

கடிகாரமுள் 4.00 மணியை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தாய்க்கு முன்பே புறப்பட்டுவிட்டான் ஆதீத். "அம்மா போய் வருகின்றேன்" என்று சொன்னபடியே தாயின் பதிலுக்குக் காத்திராமல் ஓடுகின்றான் ஆதீத். "சிசெரா… சிசெரா…" கூப்பிட்டபடியே நுழைகின்றான், பொறுமையற்றவனாய். "கொம்பியுட்டர் கேம்" விளையாடுவோமா? என்கிறான். வீட்டின் பின்புறத்திலிருந்து ஒரு சத்தம் "ஆதீத் நான் இங்கே இருக்கின்றேன் இங்கே வா" விரைகின்றான் ஆதீத். வீட்டின் பின்புற மாமர நிழலில் ஒரு தாத்தா. அவரது மடியில் தலை வைத்தவனாய் ஊஞ்சலில் படுத்திருந்தான் சிசெரா. ஆதீத்தைக் கண்டதும் எழுந்தவனாய் இன்று "கொம்பியுட்டர் கேம்" தேவையில்லை. சுவாரசியமான கதைகளை இந்த தாத்தா எனக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றார். நீயும் வா கதை கேட்போம்" என்றவனாய் "இவர் என் தூரத்து உறவான ஒரு தாத்தா, சில நாட்கள் எங்கள் வீட்டிலே தங்க வந்திருக்கின்றார்" என அந்த தாத்தாவை அறிமுகம் செய்து வைத்தான். அப்படியே தாத்தாவின் பக்கமாய் திரும்பி "என் நண்பன் ஆதீத் வந்திருக்கின்றான்" என ஆதீத்தை அறிமுகம் செய்து வைத்தான். "நாம் மூவரும் கடற்கரைக்கு சென்று உலாவி வருவோம் அங்கே எங்களுக்கு கதை சொல்லுங்கள்" என்று செல்லமாய் கட்டளையிட்டான். சிசெராவின் வீட்டாரின் அனுமதியோடு ஐந்து நிமிட நடைத் தொலைவிலுள்ள கடற்கரைக்குப் போக புறப்பட்டனர் மூவரும்.

"சற்றுப்பொறுங்கள்" என்றபடியே அறைக்குள் நுழைந்த தாத்தா ஐந்து நிமிடங்களாகியும் வெளியே வரவில்லை. நண்பர்கள் இருவருக்குமே பொறுமை இழந்து விட்டது. "அறை பூட்டப்பட்டிருக்கிறதே என்ன செய்யலாம்" என்றான் சிசெரா. "சற்றுப்பொறு உடை மாற்றுகிறார் போலும்" ஊகத்தை வெளிப்படுத்தினான் ஆதீத். இவ்வாறு சொன்ன மாத்திரத்தில் வெளியே வந்தார் தாத்தா. ஆனால் உடையிலோ எந்த மாற்றமுமில்லை.

"இவ்வளவு நேரமும் என்ன செய்தீர்கள் தாத்தா" சிசெராவின் கேள்விக்கு "சொல்கின்றேன்" என்றபடி, வெளியே வந்து, தன் பாதணிகளை அணிய வேஷ்டியை சற்று உயர்த்தினார் தாத்தா. "ஓ இது என்ன பெரிய வடுக்கள்…" ஆச்சரியம் கலந்த தொனியில் பரிதாபமாய்க் கேட்டான் ஆதீத். "இதைத்தான் நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். தாத்தா பதில் சொல்ல ஆரம்பிக்கும்போது தான் நீ வந்தாய்" என்றான் சிசெரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் இருவருடைய கேள்விகளுக்குமே பதில் சொல்கின்றேன். வாருங்கள்" என்றபடியே அவர்கள் இருவரது கைகளையும் பிடித்தபடியே கடற்கரை நோக்கி நடந்தார் தாத்தா.

"என் சிறுவயது முதல் என் அப்பா எனக்கு ஒரு அறிவுரை வழங்கியிருந்தார். வீட்டிலிருந்து எங்கே புறப்படுகின்ற போதும்; போக முன்பதாகவே உன் அறைக்கதவைப் பூட்டி ஐந்து நிமிடங்கள் கர்த்தரை நோக்கி ஜெபம் செய்து, உன்னைக் கர்த்தரின் கைகளில் ஒப்புவித்து பயணத்தை தொடங்கு, எல்லாமே வாய்க்கும். என்பதுதான் அந்த அறிவுரை. நான் புறப்பட முன்பு ஐந்து நிமிடங்கள் தாமதித்ததற்கான காரணம் அதுதான்." தாத்தாவின் முதல் கேள்விக்கான பதிலோடு கடற்கரையை அடைந்தனர் மூவரும். "நல்லது... அந்தக் காயங்கள்.." ஆர்வத்தோடு கேட்டான் சிசெரா.

"என் தகப்பன் கூறிய அறிவுரையை நான் அலட்சியம் செய்து கொண்டே வந்தேன். அப்பாவும் பல முறை சொல்லிக்கொண்டே வந்தார். அப்போது நான் ஒரு நாள் கால்பந்து விளையாட மைதானம் நோக்கிப் புறப்பட்டேன். ஜெபித்தாயா? என்ற அப்பாவின் கேள்வியை காதில் வாங்காமல் பறப்பட கால் வைத்த போது என் அப்பா பிரம்பு ஒன்றை எடுத்து ஓங்கியபடி என்னை நோக்கி வந்தார்" தாத்தா கதையை முடிக்கு முன்பே "என்ன, உங்கள் அப்பா உங்களுக்கு அடித்தாரா"? அது சரியா? என்று குறுக்கிட்டான் சிசெரா. " ஏன்? பிள்ளையை தண்டியாமல் விடாதே, அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான்" என்று வேதாகமத்திலே நீதிமொழிகள் 23:13 சொல்கிறதே அது தவறில்லையே, ஆனாலும் என் அப்பா அடிக்கவில்லை. நான்தான் பயத்தினால் ஓடத்திரும்பிய வேளை கதிரையின் கால்கள் என் கால் விரல்களைப் பதம் பார்த்துவிட்டன. என் நடுவிரல் முறிந்து துண்டாகி விட்டது. நான் துடித்துப் போனேன். உடனடியாகவே என் அப்பா என்னை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சை அளித்தார். அதனால் வந்தது தான் இந்த வடுக்கள்.

இந்த மாறாத வடு தரும் உபதேசமே "வீட்டிலிருந்து புறப்படமுன் ஐந்து நிமிடங்கள் அறையைப் பூட்டி ஆண்டவரோடு பேசும் ஒருவனாய் என்னை மாற்றியது" என கதையை கூறி முடித்தார் தாத்தா.

கதை கேட்ட சுவாரசியத்தில் எதிர்கொண்டு வந்த அலையை அவர்கள் கவனிக்கவேயில்லை. அலையின் வேகத்தில் சிசெரா விழுந்து இழுபட ஆரம்பிக்க, ஆதீத் அலறத் தொடங்கினான். தாத்தாவோ தன் கரத்தை சிசெராவிற்கு கொடுத்து எழுப்பி நிறுத்தியபடியே "எதற்கும் கலங்கவேண்டியதில்லை நான் உங்களுக்காகவும் தான் ஜெபித்து புறப்பட்டேன். கர்த்தர் கைவிடார்" என்றார்.

தொடர்ந்து "இருள முன்பே வீடு செல்வோம்" என்று தாத்தா கூற மூவரும் வீடு நோக்கி நடந்தனர். கருத்து நிறைந்த அன்றைய நாள் ஆதீத், சிசெரா நண்பர்களின் வாழ்வில் நல்லதோர் பாடத்தின் தொடக்க நாளாயிற்று.

*ஆக்கம்:*

**றமணி அக்கா**

பெரிய கல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெதடிஸ்தரில் இருக்கக்கூடாத குணாதிசயங்கள்

- மது வாங்குதல் கூடாது.
- மதுவிற்றல் கூடாது.
- வட்டிக்கு வாங்குதல் கூடாது.
- வட்டிக்குக் கொடுத்தல் கூடாது.
- தங்க நகைககள் அதிகம் அணிதல் கூடாது.

  (சேமிக்கும் பணத்தினால் பிறருக்கு உதவி செய்யலாம்)
- விலையுயர்ந்த ஆடைகளை அணிதல் கூடாது.

  (சேமிக்கும் பணத்தினால் பிறருக்கு உதவி செய்யலாம்)
- சுயநல நடவடிக்கைகளில் ஈடுபடல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓய்வு பெற்ற பணியாளர் பணிகள்
## சகோ. எஸ்தர் சின்னத்தம்பி

கோமாரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா ஆகிய இருவருக்கும் கனிஷ்ட புதல்வியாக பிறந்த எஸ்தர் சின்னத்தம்பி ஆகிய நான் 14.12.1944 அன்று கோமாரி மண்ணில் உதித்தேன். ஆரம்ப காலத்தில் இருந்து பெற்றோர் அன்பிலும் ஆலய வழிபாடுகளிலும், பாடசாலை கல்வியிலும் பெற்றோரால் வளர்க்கப்பட்டு வந்தேன்.

எனது பாடசாலையின் வாழ்க்கை காலமிருந்தே நான் ஆலயக் காரியங்களில் ஈடுபடுவது வழக்கம். இக் காலத்திலேயே நான் ஞாயிறு பாடசாலை போன்ற காரியங்களில் ஈடுபட்டு வந்தேன். இவ்வேளையில் எனது பாடசாலைக் காலம் முடிந்த பிற்பாடு புத்தூருக்கு தாதிய பயிற்சிக்காக 1963ஆம் ஆண்டு சென்றேன். இவ்வேளையில் எனக்கு ஆண்டவரின் ஊழியத்தை செய்வதற்கு வாஞ்சை இருந்தது. இதற்கு உந்துதலாக செல்வி. அற்கின்ஸ் அம்மா அவர்களும் இருந்தார். இக்காலத்தில் நான் ஊழியப் பயிற்சிக்காக அழைக்கப்பட்டேன். இதனை கல்முனை கிறிஸ்த இல்லத்தில் மேற்கொண்டு வந்தேன். எனது பயிற்சியின் காலம் முடிவடைந்த பின் 1968-1973 வரையான காலத்தில் மூதூர் சபைக்கு அருட்திரு. எம். ஏ. ரெட்ணராஜா அவர்களுடனும், அருட்திரு. யூலியன் அவர்களுடனும் 5 வருட காலம் எனது பணியை மேற்கொண்டேன். பின்னர் 1974-1975 வரை கோமாரி திருச்சபையில் அருட்திரு. கருணைராஜா அவர்களின் தலைமையில் பணி புரிந்தேன். இத்தோடு 1976-1980 வரையான காலப்பகுதியில் அக்கரைப்பற்று திருச்சபையிலும் இவருடைய தலைமைத்துவத்திலேயே பணியாற்றி வந்தேன்.

இதனைத் தொடர்ந்து 1981-1982 வரையில் கல்முனை கிறிஸ்த இல்லத்தில் அருட்திரு.தேவநேசன் அவர்களின் தலைமையில் பணி புரிந்தேன். 1982-1983 வரை கொழும்பு சிற்றி மிஷனுக்கு அருட்திரு. எஸ்.எம். ஏ. ஜேக்கப் அவர்களின் தலைமையில் பணியாற்றுவதற்காக சென்று அங்கு பணி புரிந்த ஒரு வருட காலத்தில் சிங்கள –தமிழ் கலவரம் இடம் பெற்ற போது, எனது உடைமைகள்அனைத்தையும் இழந்த நிலையில்; கடவுளின் செயலால் உயிர் பிழைத்து வாழைச்சேனைக்கு பணிக்காக வருகை தந்த போது; அங்கு அருட்திரு. ஜே. ஜெகசோதி அவர்கள் முகாமைக்குருவாக இருந்தார். அங்கு நான் சென்ற போது ஒரு சிறிய கொட்டிலில் ஆராதனை இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

சோர்வுறாமல் நானும் சபை மக்களும் சேர்ந்து ஐக்கியமாக ஊழியத்தை மேற்கொண்டு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி பணம் சேகரித்து ஒரு சிறிய ஆலயத்தை கட்டி அங்கு 1984-1989 வரையான காலப்பகுதியில் எனது பணியை மேற்கொண்டேன்.

இதன் பின்பு 1990-1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொத்துவில் திருச்சபைக்கு இறைபணிக்காக வருகை தந்தேன். அந்த வேளையில் அருட்திரு. எஸ். டி. தயாசீலன் அவர்களின் தலைமையில் பணியாற்றுகின்றபோது பொத்துவிலில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக கோமாரியில் இருந்த வீட்டிற்கு இடம் பெயர்ந்து வந்து அங்கிருந்து ஊறணி, பொத்துவில், பாணமை போன்ற பிரதேசங்களில் மிகவும் சிரமத்துடன் இக்கட்டான சூழ்நிலையில் ஊழியப் பணியை மேற்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே வேளையில் தான் 1995ஆம் ஆண்டு சின்னமுகத்துவார சபைக்கு இடமாற்றமாக சென்று அருட்திரு. கே. மயில்வாகனம் அவர்களின் தலைமையில் பணி புரிந்தேன்.

இறுதியாக 1996ஆம் ஆண்டு மீண்டும் கல்முனை கிறிஸ்த இல்லத்திற்கு வந்து அருட்திரு. அருள்ராஜா அவர்களுடனும், அருட்திரு. எஸ். டி. தயாசீலன் அவர்களுடனும் 9 வருட காலம் எனது பணியை மேற்கொண்டேன்.

2004ஆம் ஆண்டு எனது சூழ்நிலை காரணமாக பணியில் இருந்து ஓய்வு பெறும் நோக்குடன் எனது சொந்த வீட்டிற்கு சென்றேன். 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரலையினால் எனது சகோதரங்கள், உடைமைகள் யாவும் இழந்த நிலையில் இருந்த போது திருக்கோவில் சேகரத்தில் பணியாற்றிய அருட்திரு. ஆர். தயாநிதி அவர்களின் அழைப்பில் ஆண்கள் விடுதியில் இருந்து அவர்களுடன் சேர்ந்து எனது கடவுளின் பணியை 02 வருட காலம் செய்து முடித்து ஓய்வு பெற்றேன்.

32 வருட காலத்திற்கும் கடவுளின் பணியை செய்ய எனக்கு பெலன் தந்த ஆண்டவருக்கு நன்றியை செலுத்துவதோடு, இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்கும் என் நன்றி உரித்தாகட்டும்.

"அழைத்தவர் என்றும் நடத்துவார்"

**சகோ. எஸ்தர் சின்னத்தம்பி**
ஓய்வு பெற்ற ஊழியர் (டீக்கனஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெதடிஸ்தன் என்பவன் யார்?

1. இருதயம் அனலடைந்த அனுபவம் உள்ளவர்
2. பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்ட அனுபவம் உள்ளவர்
3. திருமறையை வாழ்வின் மையமாகக் கொண்டவர்
4. சாட்சியாயிருப்பவர்
5. வட்டார குழுக்கூட்டங்களில் பங்கு கொள்பவர்
6. ஆலய வழிபாட்டுக்கு ஒத்துழைப்பவர்
7. கடவுளின் வருகைவரை சாட்சியாயிருப்பவர்

## ஜோன் வெஸ்லி ஐயரின் மகுட வாக்கியம்

"உம்மால் இயன்ற அனைத்து நன்மைகளை
Do all the good you can

இயன்ற அனைத்து வழிகளிலும்,
In all the ways you can

இயன்ற எல்லா இடங்களிலும்,
In all the places you can

இயன்ற அனைத்து நேரங்களிலும்,
At all the times you can

இயன்ற எல்லா மக்களுக்கும்,
To all the people you can

உம்மால் இயன்ற வாழ்நாள் முழுவதிலும்
As long as ever you can
செய்வீர், சிறப்பாய் செய்திடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைபணியில் அர்ப்பணித்து இளைப்பாறிய
# செல்வி. மேரி ஜெயராசமலர் ஞானமுத்து

கற்றவர்கள் செறிந்து வாழும் பெரியகல்லாற்றில் முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் திரு. டேவிட் ஞானமுத்து மாக்கிறேட் பார்வதி ஆகிய இருவருக்கும் கனிஷ்ட புதல்வியாக 18.07.1944 அன்று புகழ்பூத்த மண்ணில் அவதரித்தேன். செல்வி. மேரி ஜெயராசமலர் ஞானமுத்து ஆகிய நான், எனது ஆரம்ப கல்வியை கல்லாறு மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் கற்று அதன்பின் கனிஷ்ட, சிரேஷ்ட, இடைநிலைக் கல்வியைப் பெறுவதற்காக 1955ஆம் ஆண்டு கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் கல்வி பயிலும்படி கல்முனை கிறிஸ்த இல்லத்திற்கு சென்றேன். இந்த கிறிஸ்த இல்லத்தில் தான் ஆன்மீகம் என்னும் அரும்பெரும் துளிர்விட்ட காலமாகும். இறை அருளின் அருட்பொழிவால் என் ஆத்தும பாரம் சிறுவர் மத்தியில் சேவை துரிதமாக வளர்ந்த காலம். வாலிப காலம் போராட்டமானதாக அமைந்தாலும் வளமுள்ளதாய் அமைய ஆண்டவர் இயேசுவின் அன்பும், விடுதலையும் உதவி செய்தது. ஆண்டவர் இயேசுவின் அருளாற்றலையும், அவர் வார்த்தைகளின் அறிவாற்றலையும், அதனால் ஏற்பட்ட மனமாற்ற உணர்வையும், ஆத்தும வாழ்வில் குதூகலத்தையும் குறைவின்றிப் பெற வழிவகுத்த காலம். கிறிஸ்த இல்லத்தில் அந்நியோன்னிய அன்பு, கடவுளை அறியும் அறிவு, ஜெப வாழ்வு, சிறந்த சிந்தனை என்ற பல வர்ண மலர்களால் பூந்தோட்டமாய் அமைந்தது.

கிறிஸ்த இல்லத்தின் சுடர்களாய் அருளொளி ஏற்றி அரவணைப்புடன் எம் எல்லோரையும் சிறப்புற வழிநடத்திய அற்கின்ஸ் அம்மா அழகிய தமிழை மழலையால் அரவணைத்ததனை நான் என்றும் மறவேன். என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய பவளி அக்கா(செல்வி. பவளி வீரக்குட்டி) அவர்களது ஜெபஜீவியமும், அரவணைப்பும் என்னை வெகுவாய்க் கவர்ந்தது மட்டுமல்ல எனது ஊழியப்பாதையின் உயர்வுக்கும், ஆண்டவரது அழைப்பின் பெறுமதிக்கும் மெருகூட்டும் ஊன்றுகோலாக அமைந்தது. சேவை- சிறுவர் ஊழியம்சார் மனப்பான்மை ஒருபுறம், மீட்பின் அனுபவம் மறுபுறம் நெருக்கி ஏவியபோது 1964ஆம் ஆண்டு மும்முரமாக முழுநேர ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன். அப்போது கல்லாறு திருச்சபையில் அருள்திரு. ஜீ. ஏ. வின்ஸ்லோ குருவானவர் ஊழியம் செய்து கொண்டிருந்தார். சிறுவர் மத்தியில் எனது சேவையும், கரிசனையும் கண்டு எனது இறைச்சேவைக்கான அழைப்பை உறுதி செய்து முதன்முறையாக மூதூர் என்னும் இடத்திற்கு அனுப்பப்பட்டேன்.

திருகோணமலை சேகரத்தில் முகாமைக்குருவாக பணியாற்றிக் கொண்டிருந்த முகாமைக்குரு அருள்திரு. ஜுலியன் அவர்களின் கண்காணிப்பின்கீழ் சிறுவர் மத்தியில் நற்செய்திப்பணி செய்யவும், ஓய்வுநாள் பாடசாலை சேவையில் மனதார ஈடுபடவும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அந்நாட்களில் அருட்சகோதரி. மலர் சின்னையா, பாக்கர் அம்மா இருவருடனும் சேவை செய்தேன். "சிறுவர்களை என்னிடத்தில் வர இடங்கொடுங்கள் அவர்களைத் தடை செய்யாதிருங்கள்" என்ற வசனம் என்னுள்ளத்தில் அசையா இடம் பிடித்திருந்தது. இவர்களுடன் 1965-1966 ஆண்டுகளில் சேவையில் ஈடுபட்டபின்பு 1967-1968 ஆண்டுகளில் அருள்திரு. பசில் இராஜசிங்கம் அவர்களின் கண்காணிப்பின் கீழ் கொழும்பு சிற்றிமிஷன் திருச்சபையில் ஊழியம் செய்தேன். சேரிவாழ் சிறுவர்கள் என் கரிசனையாக இருந்ததால் அவர்கள் வாழ்வு சிறப்புற அயராது பாடுபட்டேன். அதன் பின்பு 1968-1969 வரை மாக்கிரேட் போரம்மா அவர்களோடு யாழ்ப்பாணம் வேம்படியில் ஒருவருட சேவைப் பயிற்சி பெற்று மேற்படிப்புப் பயிற்சிக்காக ஒருவருடம் பிலிமத்தலாவை இறையியல் கல்லூரிக்கு அனுப்பப்பட்டேன். பயிற்சி முடித்து மீண்டும் 1970ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக சிற்றிமிஷன் திருச்சபைக்கு அனுப்பப்பட்டேன். அங்கு பணியாற்றிவிட்டு 1973ஆம் ஆண்டு தை மாதம் இரண்டாவது தடவையாக மூதூர் திருச்சபைக்கு அனுப்பட்டேன். அங்கு முகாமைக்குருவாக இருந்த அருள்திரு. வின்ஸ்லோ குருவானவருடன் பணி செய்தேன். என்னோடு திருமதி. றோகினி அரியநாயகம் அவர்களும் இணைந்து பணி செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976ஆம் ஆண்டு அருள்திரு. எம். ஏ. இரட்ணராஜா குருவானவரின் மேற்பார்வையின்கீழ் திருமதி. றோகினி அரியநாயகத்துடன் இணைந்து 1977வரை ஓட்டுமடம் வண்ணார் பண்ணையில் சேவை செய்தேன். தொடர்ந்து 1978ஆம் ஆண்டில் இருந்து அக்கரைப்பற்று திருச்சபையில் அருள்திரு. எஸ். எஸ். கருணைராஜா குருவானவரின் மேற்பார்வையின் கீழ் சேவைசெய்யும் காலத்தில் 1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி வீசிய புயலில் சிக்கினேன். 1982ஆம் ஆண்டுவரை சிறுவர் மத்தியிலும் அறியாமையில் வாழ்ந்தோர் மத்தியிலும் சேவை செய்தேன். 1983ஆம் ஆண்டு அருள்திரு. வெஸ்லி ஜெயசீலன் குருவானவர் முகாமைக்குருவாக இருந்த காலத்தில் புளியந்தீவு சேகரத்தில் உள்ள மஞ்சந்தொடுவாய் திருச்சபை, முதலைக்குடா திருச்சபை ஆகிய இடங்களில் 6 வருடங்கள் பணி செய்தேன். 22 குடும்பங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட திருச்சபை 5 ஆண்டுகளில் 49 குடும்பங்களாக வளர்ந்தது. தற்போது நாவற்குடா, ஆரையம்பதி ஆகிய இடங்களில் ஆலயங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை பார்த்து என் ஆண்டவருக்கு ஸ்தோத்திரங்கள் செலுத்துகிறேன். 1980ஆம் ஆண்டு மீண்டும் என் ஆரம்ப பணித்தளமாகிய கல்முனைக்கு சென்றேன். அருள்திரு. எஸ். கே. ஜெபரெட்ணம் குருவானவருடன் ஒருவருடம் பணிசெய்தேன். இங்கு பணிசெய்த காலம் தீவிரவாதம் தீ போல பரவியதால் பலர் சொந்த இடங்களை விட்டு வெளியேறினர். இதனால் மூன்றாம் முறையாக 1990ஆம் ஆண்டு அருள்திரு. க. கருணாசேகரா குருவானவரின் மேற்பார்வையின் கீழ் மூதூர் திருச்சபைக்கு அனுப்பப்பட்டேன். அக்காலம் மிகக் கொடூரமான காலமாகும். இனக்கலவரம், யுத்தம் ஆகியவற்றால் மூதூர் ஆலயம் அகதி முகாம் ஆனது. குற்றம் எதுவும் செய்யாத வாலிபர்களை கைது செய்வது போன்ற வன்செயல்கள் அதிகரித்த காலம். இரவு பகல் பாராது அயராது உழைத்தமையால் பலரின் விடுதலை அற்புதமாகக் கிடைத்தது. பிற மதத்தினரையும் அழைத்து தஞ்சமடைந்தோரோடு தினமும் மாலையில் ஆலயத்தில் ஜெப சேவையை நடாத்தினேன். கொடூரம் அதிகரித்ததினால் எமது உறைவிடங்களை காடுகளின் மத்தியில் அமைக்க நேரிட்டது. பயங்கரவாதம் அதிகரித்ததினால் அநேக வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர். அப்போது படைப்பிரிவுக்கு பொறுப்பாயிருந்த ஜெனரல் அல்விஸ் என்ற இராணுவ அதிகாரியிடம் முறைப்பாடு செய்து பலரை விடுதலை செய்தது கடவுள் கொடுத்த பாக்கியம். எமது உடமைகள் மஞ்சந்தொடுவாயிலும் மூதூரிலும் சூறையாடப்பட்டு முற்றாக எரிக்கப்பட்டது. எமது உயிரைப் பாதுகாக்க "தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்." சங் 27:5இல் குறிப்பிடப்பட்டபடி எங்களை கைகளின் மறைவில் கடவுள் வைத்து வைத்தார். தனிமையின் பாதையில் மார்போடு இறைவன் என்னை ஆதரித்து அணைத்து வழிநடத்தியமை மோசேயின் விடுதலைப் பயணத்தின் விபரம் விளக்கும் விதமாய் அமைந்தது.

1994ஆம் ஆண்டு அருள்திரு. எஸ். கே. ஜெபரெட்ணம் குருவானவரின் காலத்தில் பழுகாமம் திருச்சபையில் பணி புரிந்தேன். இக்காலகட்டத்தில் பயங்கரவாதம் உச்சக்கட்டத்தில் இருந்ததினால் போக்குவரத்து வசதிகள் இல்லை. களுவாஞ்சிக்குடியிலிருந்து கொழுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் கால்நடையாகச் சென்றுதான் பணி செய்தேன். இதனால் நாளடைவில் காலில் வாதநோய்க்கு இலக்கானேன். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாசகத்திற்கு இணங்க 33 வருடங்கள் அர்த்தமுள்ள சேவையின் பின்னர் ஓய்வு பெற்றேன். இவ்வளவு வருட காலமாக என்னைத் தாங்கிய திருச்சபைக்கும், இதுவரை எனக்காக ஒரு கலசம் தண்ணீர் தந்தவர்கள், ஒருவேளை உணவு தந்தவர்கள், அங்கலாய்த்தபோது உதவியவர்கள் அனைவருக்கும், எல்லாவற்றிக்கும் மேலாக என்னை போர்க்களமாகிய பணித்தளங்களிலும் என்னைப் பொற்தளமாகிய காலடியில் வைத்து ஆதரிக்கும் இயேசுக்கிறிஸ்துவுக்கும் நன்றி கூறுகின்றேன். கடவுளுக்கே எல்லா கனமும் மகிமையும் உண்டாகட்டும்.

**சகோ. மேரி ஜெயராசமலர் ஞானமுத்து**
ஒய்வுபெற்ற ஊழியர் (டீக்கனஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடுவானத்திற்கு உங்கள் இதயத்தால் தொடக்கூடியவை

- உங்கள் சேகர, சபை தொடர்பான நிகழ்வுகளை தயவு செய்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

- தங்கள் சேகர வரலாறுகளை எமக்கு அனுப்பி வையுங்கள்.

- தொடுவானம் பற்றி உங்கள் எண்ணங்களை, கருத்துக்களை அனுப்பி வையுங்கள்.

- உங்கள் ஆலயத்தில் அனைவருக்கும் தொடுவானத்தை அறிமுகம் செய்து வையுங்கள்.

- உங்களுடைய ஆக்கங்கள் அனைத்தையும் இரு பக்கங்களுக்குள் அடங்குமாறும், சுருக்கமாகவும், தெளிவாகவும் அனுப்பி வையுங்கள்.

- ஓய்வு பெற்ற பணியாளர்கள், பணிகள் பற்றி அனுப்பி வையுங்கள்.

- கர்த்தருக்குள் நித்திரையடைந்த பணியாளர்கள், பணிகள் பற்றி எமக்கு அனுப்பி வையுங்கள்.

- அடுத்து வெளிவர இருக்கும் சஞ்சிகை புதுவருட - தவக்கால சஞ்சிகையாக வெளிவர இருப்பதனால் அதற்கேற்ற ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

*அனுப்ப வேண்டிய முகவரி*


**ஆசிரியர்**
**"தொடுவானம்"**
**மெதடிஸ்த குருமனை**
**பெரிய கல்லாறு**
**கல்லாறு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 200ஆவது ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் வழிபாடு



காலியில் நடைபெற்ற இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 200ஆவது ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் வழிபாட்டில் இலங்கையின் ஜனாதிபதி மேதகு. மகிந்த ராஜபக்ஷ அவர்கள் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org